# வாடகை கார் அறிமுகம்

சென்னை, டிச. 14–

மெட்ரோ ரயில் பயணியர் வசதிக்காக, வாடகை கார் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில், குறைந்த கட்டணத்தில், ஷேர் ஆட்டோ, கார் வசதி மற்றும் அனைத்து நிலையங்களிலும், வாடகை இல்லா சைக்கிள் வசதி செய்யப்பட்டு உள்ளது.

இத்துடன், திருமங்கலம் மெட்ரோ ரயில் நிலையத்தில், 'ஜூம் கார்' நிறுவனத்துடன் இணைந்து, பயணியருக்கு, வாடகை கார் வசதியும், நேற்று முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், மெட்ரோ ரயில் பயணியர், உரிய அடையாள அட்டை காட்டி, காரை எடுத்து, தாங்களே ஓட்டிச் செல்லலாம்.

முன்பணம், 5,000 ரூபாய் செலுத்த வேண்டும். பயணியர் செல்ல வேண்டிய இடத்திற்கு சென்று, திரும்ப வந்து காரை ஒப்படைக்கலாம். நிலையத்தில் இருந்து கார் சென்று, திரும்ப நிலையத்தில் ஒப்படைக்கும் வரை, 'ஜிபிஎஸ்' வசதியில் கண்காணிக்கப்படும்.

பெட்ரோல் செலவுடன், வாடகையும் சேர்த்து வசூலிக்கப்படும். மேலும் தகவலுக்கு, இணைய தளத்தில், www.Zoomcar.com முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என, மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.